இதுவரை அது அமலுக்கு வரவில்லை, செயல்படுத்தப்படவில்லை. எனவே, முதியோருக்கு பஸ் பாஸ் வழங்கி, ஓய்வூதியத் திட்டத்தில் பலருக்கும் முழுமையாக பலன் கிடைக்காமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் சீர்செய்து உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நடவடிக்கைக் குறிப்புகளில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

தொகுதி கோரிக்கைகள்:

குமரி மாவட்ட மக்கள் இரப்பர், தேங்காய் விவசாயம் செய்து வாழ்க்கை நடத்துகின்றனர். இரப்பர் விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற மத்திய அரசு இறக்குமதி செய்யும் இரப்பருக்கு தடை விதிக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொப்பரைத் தேங்காயை ஒரு கிலோவுக்கு ரூ.150/— வீதமும், இரப்பரை ஒரு கிலோவுக்கு ரூ.200/— வீதமும் அரசு கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சூழியியல் பாதுகாப்பு வளையம்: குமரி மாவட்டம் பரப்பளவில் சிறியது. மக்கள்தொகை அதிகமாக உள்ள பகுதியாகும். எனவே, மலையோரப் பகுதிகளான குலசேகரம், களியல், பத்துகாணி, ஆறுகாணி, நெட்டா, சிவலோகம், சிற்றாறு, பனச்சமூடு, புலியூர் சாலை, தேவிகோடு போன்ற ஊர்களில் வசிக்கும் ஏழை மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் நலன் கருதி சூழியியல் பாதுகாப்பு மண்டலத்தை '0' கிலோ மீட்டராக நிர்ணயம் செய்து, மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டு அறிக்கையை மத்திய, மாநில அரசுகளுக்கு அனுப்ப அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்ட மக்களைப் பெரிதும் பாதிக்கும் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்தை அடியோடு இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலையோரப் பகுதிகளில் உள்ள தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்கள், குடியிருப்புப் பகுதிகள், வணிக வளாகங்கள், பயிர் செய்யும் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா நிலங்களை முழுமையாகத் தனியார் பாதுகாப்புச்

சட்டத்திலிருந்து விடுவிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைத் தொழில், பீடி சுற்றுதல், பானை செய்தல், ஓலை முடைதல், பாய் முடைதல், தேங்காய் நார் தொழிலாளர்கள், இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் என சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழில் செய்து வருகின்றனர். இவர்கள் தரமான மருத்துவ வசதி பெறும்விதமாக மத்திய அரசின் இ.எஸ்.ஐ. சிறப்பு மருத்துவமனை, கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆசாரிபள்ளத்தில் அமைக்க மத்திய அரசு ரூ.108 கோடி ஒதுக்கீடு செய்து, தமிழக அரசிடம் 5½ ஏக்கர் நிலம் கேட்டது. ஆனால், தமிழக அரசு 2¾ ஏக்கர் நிலம் மட்டுமே ஒதுக்கியுள்ளது. எனவே, இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைய தமிழக அரசு 5½ ஏக்கர் நிலம் இலவசமாக இ.எஸ்.ஐ. நிருவாகத்திற்கு ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் பட்டா நிலங்களில் புதிதாக வழிபாட்டுத் தலங்கள், சர்ச்சுகள் மற்றும் மசூதிகள் கட்ட தமிழக அரசும், குமரி மாவட்ட நிருவாகமும் எளிதான நடைமுறைகளைக் கடைபிடித்து, அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக சுற்றுலாத் துறை சிறப்பாக செயல்பட அரசு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் படகு தளம் அமைத்து, கூடுதல் படகுகள் இயக்கவும், திற்பரப்பு அருவியின் மேல்புறமுள்ள படகுத் துறை மற்றும் அதனைச் சார்ந்த பூங்காவை பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகத்தின்கீழ் கீரிப்பாறை, காளிகேசம், பரளியாறு, மணலோடை, மயிலாறு, சிற்றாறு, குற்றியாறு, மருதம்பாறை, கல்லாறு ஆகிய இடங்களில் உள்ள 4,870 ஹெக்டேர் பரப்பளவில், 440 ஹெக்டேர் பரப்பை வனத் துறை வனத்தில் சேர்த்தனர். ஒரு தொழிலாளருக்கு